RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22491

OPEN ACCESS

# அதிரை முஹம்மது தாஹாவின் சிற்றிலக்கியங்கள் இஸ்லாமிய சிந்தனைகள்

கா. ரசூல்பீ [அ, *], ப. பூஞ்சோலை [அ]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, உமையாள்புரம், செவந்திலிங்கபுரம், முசிறி, திருச்சிராப்பள்ளி - 621202

# Minor Literature of Muhammad Taha Islamic Thought

K. Rasulbee [a, *], P. Pooncholai [a]

[a] Department of Tamil, Kachiyaapa Munivar Tamiyazhal Kalluri, Musiri-621202, Tiruchirappalli, Tamil Nadu, India

* Corresponding Author: rasulbee@gmail.com

Received: 03-02-2022
Revised: 28-09-2022
Accepted: 06-10-2022
Published: 09-10-2022

Check for updates

**Abstract**

Man appeared in the world, lived in groups, formed a society and began to live in a civilized manner. Certain basic ideas have been created and followed for the formation and order of faith in life. Language is the basis of all this. It is this language that makes us think in the 21st century. The origin of language and the evolutionary evolution of grammatical literature has amazed us. Language has originated in the form of Sangams and created Sangam literature, Keezhkanakku books, Dharma books, Epics, Puranas, Bhakti literature, religious literature, minor literature, Siddha literature and modern literature. Tamil scholars have contributed immensely to the origin of a language, to translate into sound and script and to survive till the present time. Adhirai Muhammad Taha is one of the scholars who possessed the knowledge of language, grammar and literature. Islam in their works.

**Keywords:** Muhammad Taha, Society, Tamil literature, Tamil scholars

## முன்னுரை

உலகில் மனிதன் தோன்றி குழுவாக வாழ்ந்துச் சமூகமாக உருவாகி நாகரீகத்துடன் வாழத் தொடங்கினான். வாழ்க்கையில் நம்பிக்கை தோன்றவும், ஒழுங்கத்திற்காகவும் சில அடிப்படையான எண்ணங்கள் தோற்றுவிக்கப்பட்டும், பின்பற்றப்பட்டும் வந்துள்ளன. இதற்கெல்லாம் அடிப்படையாகத் திகழ்வது மொழி. 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மை சிந்திக்க வைப்பது இந்த மொழியே. மொழி தோன்றி அதிலிருந்து பல்வேறு பரிணாம அடிப்படையில் இலக்கண இலக்கியங்கள் தோன்றி நம்மை பிரமிக்க வைத்துள்ளன. சங்கங்களாகத் தோன்றி சங்க இலக்கியம் படைத்து, கீழ்க்கணக்கு நூல்களாக, அறநூல்களாக, காப்பியங்களாக, புராணங்களாக, பக்தி இலக்கியங்களாக, சமய இலக்கியங்களாக, சிற்றிலக்கியங்களாக, சித்தர் இலக்கியங்களாக, இக்கால இலக்கியங்களாகவும் மொழி தோற்றம் பெற்றுள்ளது. ஒருமொழி தோன்றி ஒலிவடிவம், வரிவடிவம் பெற்று பின் வகைமை பெற்று இக்காலம் வரையிலும் நிலைத்து நிற்க பெரும்பங்காற்றுபவர்கள் தமிழறிஞர்கள். மொழித்திறனும் இலக்கண இலக்கியப் புலமையும், எழுத்தாற்றலும் பெற்ற அறிஞர்களுள் ஒருவரே அதிரை முகம்மது தாஹா அவர்கள். அவர்களது படைப்புகளில் உருவான சிற்றிலக்கியங்களில் இடம்பெறும் இசுலாம் சமயக்கருத்துக்களை இவ்வியல் எடுத்துரைக்கின்றது.

## சமயம்

சமயம் அல்லது மதம் எனப்படுவது கடவுள் மீதான நம்பிக்கையை குறிக்கும் சொல்லாகும். மனிதன் சமுதாயமாக இணைந்து வாழத் தொடங்கிய பின் தனக்கென கொள்கைகளையும், கோட்பாடுகளையும் வகுத்துக்கொண்டான். ஒவ்வொரு நிலங்களில் வாழும் மக்களும் தங்களுக்கேற்றபடி சடங்குகளையும், விழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். வணிகம் மற்றும் பிற தொடர்புகளினால் வெவ்வேறு நாட்டைச் சார்ந்தவர்கள் ஒன்றுகூட தங்களது நம்பிக்கையான சடங்குகளும் சமயங்களும் நட்பு முறையில், நம்பிக்கை முறையில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டுள்ளனர். இதனால் சமங்களும் நம்மிடையே பெருகியுள்ளது.

ஆங்கிலம் வணிகத்தின் மொழி, இலத்தீன் சட்டத்தின் மொழி, கிரேக்கம் இசையின் மொழி, செருமன் தத்துவத்தின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி, இத்தாலி காதலின் மொழி என்று கூறுவது பொருந்தும் எனின் தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவதும் பொருந்தும் என்று தனிநாயக அடிகளார் தெளிவுபடுத்துகிறார். ஒரு மொழி தோன்றிய பிறகே அம்மொழி வாயிலாகச் சமயங்கள் வளர்ச்சியடைந்திருக்கும். தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலும் சமயநிகழ்வுகள், கடவுள் வழிபாடுகள், வழிபாட்டு முறைகள் இடம் பெற்றுள்ளன.

'நின் குன்றத்து

எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்

தொழில் வீற்றிருந்த நகர்"

என முருகன் கோயிலும்,

'இரதி காமன் இவள் இவன் எனாஅ

விரகியர் வினவ வினா விறுப்போரும்

இந்திரன் பூசை இவளகலிகை இவன்

சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு

ஒன்றியபடி யாதென்று ரைசெய் வோரும்

இன்ன பலபல வெழுத்து நிலை மண்பம்"

என்ற பரிபாடல் இந்திரன், அகலிகை பற்றிய சிற்பங்களைக் கூறுகிறது. சங்க இலக்கியங்களுக்கு முன்னரே சமயங்களும் சமயங்களைப் பற்றிய நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறைகளும் பின்பற்றபட்டுள்ளது (Ramaiya, 2006).

## சமயம் வளர்த்த தமிழ்

பக்தி இலக்கிய வரலாற்றில் சமயங்களே ஆட்சி செய்கின்றன. சமயங்களினால் தமிழுக்குப் பல்வேறு இலக்கியங்கள் கிடைத்துள்ளன. 'சமயத்தை நீக்கிவிட்டால் மொழி என்னும் மாளிகை பொலிவிழந்து நிற்கக் காணலாம். இச்செந்தமிழ் நாட்டில் செழித்து வளர்ந்த சமயங்கள் பல. சங்ககாலத்தில் சைவமும் வைணவமும் செழித்திருந்தன. ஆனால் சங்கம் மருவிய காலமான இருண்டகாலத்தில் புறச்சமயங்களான சமணமும், பௌத்தமும் கால்கொண்டன" என்று தனது நூலான தமிழில் இலக்கிய வரலாற்றில் ஜெயம் சந்திரலேகா குறிப்பிடுகிறார்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்

எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை

கண்ணில் நல்லதுறும் கழுமல வளநகர்

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

எனச் சைவமும்,

'வையம் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய

சுடரொழி யானடிக்கே சூடினேன் சொன் மாலை

இடரொழி நீங்குகவே என்று"

எனச் வைணவமும்,

'ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக

போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக

நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக

காக்குவது ஏதெனில் விரதம் காக்க"

எனச் சமண இலக்கியங்களும்,

'அருள் நெறியால் பாரமிதை அறைந்தான் உடன் அடங்கிப்

பொருள் முழுவதும் ஓதிஉன்கீழ், முழுது உணர்ந்த

அருள்மொழியால் முனிவரன் தன் நல்வாய்மை அறிந்தவரே பிறப்பறுப்பார்

மருள்நெறியாம் பிற நூலும் மயக்கறும் ஆறுளதோ?"

எனப் பௌத்தமும் பாடுகிறது. 'தமிழகத்தில் கி.பி.11ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு கிறித்தவம் எழுச்சியுற்றது. "பகைவநன அன்பு செய்" "மன்னித்து வாழ்" என்ற கொள்கைகள் கிறித்தவத்தில் மேலோங்கி நிற்கின்றன. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்பதுதான் இதன் அடிப்படை கோட்பாடாகும்" என்று மு.அருணாச்சலம் குறிப்பிடுகிறார். 'கி.பி.7ஆம் நூற்றாண்டில் இறைதூதர் நபிகள் நாயகத்தால் இசுலாமிய சமயம் அரபு நாட்டில் தோன்றியது. கி.பி.14ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூரின் படையெடுப்பால் தமிழகத்தில் பரவியது. அதனால் அரபு, உருது, பாரசீக மொழிச்சொற்கள் தமிழில் கலந்து பரவத் தொடங்கின" இவ்வாறாக தமிழத்தில் சமயங்கள் வேரூன்றின.

## இஸ்லாம்

இசுலாம் என்பது ஓரிறைக் கொள்கையைக் கொண்ட ஓர் அபிரகாமிய மதமாகும். 'உலகம் முழுவதும் 1.907 பில்லியன் மற்றும் எழுபது இலட்சத்திற்கும் மேலான மக்கள் இம்மதத்தைப் பின்பற்றுகிறார்கள்" 11 என்பதை இணையதளம் மூலம் அறியலாம். 'சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும், கிறித்தவமும் போன்றே இசுலாமும் இன்பத் தமிழ்க் கடலை வளப்படுத்தியுள்ளது. இசுலாமியர்கள் தமிழ்த்தொண்டு புரிந்ததில் எவர்க்கும் பின்னிட்டவர்கள் அல்லர்" என்று கண்ணப்ப முதலியார் கூறுகிறார் (Kamal Batcha, 2006).

இறைவனால் முகம்மது நபிக்குச் சொல்லப்பட்ட செய்திகளின் தொகுப்பே குர்ஆன் எனப்படும். இது வேதத்தின் அடிப்படையிலே இயங்குகிறது. இசுலாமிய இலக்கியங்கள் குர்ஆனின் அரிய கருத்துக்களைப் பறைசாற்றும் முரசங்களாகவே உள்ளன. மனிதர்களிடம் சமத்துவத்தை பரப்புவதையே நோக்கமாகக் கொண்டது.

இம்மண்ணக வாழ்க்கை அழியக்கூடியது. அவன் இவ்வுலகில் செய்த செயல்களுக்கு ஏற்ப இறைவனிடமிருந்து பலன்களைப் பெற்றுக்கொள்வான் என்பதே இசுலாமியத்தின் முடிவான கொள்கை. வணங்குவதற்குரியவன் இறைவன் ஒருவனே என்ற ஏகத்துவக் கொள்கையே இசுலாமியத்தின் அடிப்படை அஸ்த்திவாரம். இதை நிலைநிறுத்தவே, 'நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் மலைகளாகவும், கடல்களாகவும், உறுதியாகவும், பரவலாகவும் எழுந்த இன்னல்களை எதிர்கொண்டு உழைத்தார்கள் சாதித்தார்கள். இன்னும் அந்த வழியில் நின்று மார்க்கத்திற்காக இஸ்லாமிய வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள் இறையடியார்கள்" அவ்வழியில் வழிபடும் அனைவரின் சிறப்புகளையும் பாடுவதே இசுலாம் சிற்றிலக்கியங்களாகத் தமிழில் இன்றளவும் சிறப்புப் பெற்றுள்ளன (Kamal Batcha, 2006).

## இஸ்லாம் கூறும் ஒழுக்கம்

ஒரு மனிதன் பகுததறிவுடையவனாகக் காணப்பட்டாலும் அவன் தனது பண்பாட்டாலும் சீரிய பழக்கவழக்கங்களாலுமே உயர்வைப் பெறுவதால் இசுலாம் ஒழுக்கவியலை பெரும் பண்பாடாக மட்டுமின்றி இறை விசுவாசத்தல் அங்கமாகவும் கருதுகின்றது. இதிலிருந்து பண்பாடு இன்றி இறை விசுவாசம் பூரணமடையாது எனபதை புரிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் ஒழுக்கக்கேடாக நடந்துகொள்வது இறை விசுவாசத்தில் பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்கிற அளவுக்கு இசுலாம் ஒழுக்கத்தை வலியுறுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்து மனிதன் பற்றிய இசுலாமியத்தின் பார்வை மிகப் பரந்ததாகும். இமாம் கஸ்ஸாலி அவர்கள் தனது நூலான "இஹ்யாஉலூமித்தீன்" இல் குறிப்பிடும் போது, மனிதன் இயற்கையாகவே தனது தேவைகளுக்காகப் பிறரைத் தங்கி நிற்கும் நிலையிலேயே படைக்கப்பட்டுள்ளான். அதாவது மனிதன் என்பவர் தனித்து நின்று வாழ முடியாது. பிறரில் அல்லது பிறபொருட்களை சார்ந்திருக்க வேண்டிய தேவையுள்ளது.

நம்பிக்கை, அன்பு, அடிபணிதல், வழிப்படல், அஞ்சுதல் போன்றவற்றின் மூலம் மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையேயுள்ள தொடர்புகள். அன்பு காட்டுதல், உரிமைகளை மதித்தல், உதவிச் செய்தல், நல்லிணக்கமாக செயற்படுதல் ஆகியவற்றின் மூலம் மனிதனுக்கும் பிற மனிதர்களுக்கும் இடையிலான உறவுகள் பாதுகாத்தல், பராமரித்தல், அவதானித்தல், ரசித்தல் மூலமாக மனிதனுக்கும், சூழலும் இடையிலான தொடர்புகள் என மனித ஒழுக்கப் பண்புகள் பல்வேறு அம்சங்களோடு சார்ந்திருப்பதாக அமைவதனை இசுலாம் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த வகையில் மனிதனானவன் சமூகப் பிராணியாகக் கருதப்படுகின்றான். அவனிலிருந்து சமூகம் பயனடைவதைப் போன்று சமூகத்திலிருந்து மனிதன் பயன்பெறுவது இயற்கை நியதியாகும். இதனைப் புறந்தள்ளிவிட்டு தனியாக வாழ்வதனை இசுலாம் அங்கிகரிப்பதில்லை.

சுருக்கமாக மனிதனுக்கு இசுலாம் திட்டவட்டமான நெறிமுறைகளை வகுத்திருக்கின்றது. மார்க்கக் கடமைகளைப் பேணுதல், ஒழுக்கம், பண்பாடு, குடும்ப உறவு, சமூக பொருளாதார விவகாரங்கள் நிர்வாகம், பிற மனிதர்களுடைய உரிமைகள், நீதி, சமாதானம், சர்வதேசத் தொடர்புகள் ஆகிய அனைத்து துறைகளையும் இசுலாம் கவனத்தில் கொண்டுள்ளது. நல்லவை, கெட்டவை, தீங்கானது, கெடுதியானது முதலியவற்றை பாகுபடுத்தி போற்றிப் பேணி வளர்க்க வேண்டிய நல்லொழுக்கங்கள், தன்னை காத்துக்கொள்ள வேண்டிய தீய ஒழுக்கங்கள் போன்ற மனித வாழ்வின் அனைத்து விடயங்களையும் இசுலாமிய ஒழுக்கவியல் விளங்கியிருக்கின்றது.

## இசுலாம் சமயத்தின் கட்டமைப்புகள்

நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், பெரியோரை மதித்தல், சிறியோருக்கு இரக்கம் காட்டுதல், உண்மை உரைத்தல், வாய்மை காத்தல், கற்புப் பேணல், மக்கள் மீதான அன்பு, அயலவர் உரிமை பேணல், உதவிச் செய்தல், கட்டுப்பாடு, புலனடக்கம், ஜீவகாருண்யம், இயற்கையை பராமரித்தல் போன்ற தனிமனித வாழ்வோடு தொடர்புப்படுகின்ற அனைத்து விடயங்களையும் இசுலாமிய ஒழுக்கவியல் உள்ளடக்கி இருக்கின்றது. இவ்வாறான பண்புகள் மூலம் மனிதனில் உடலாரோக்கியம், அன்பு, பாசம், சுத்தம், மன அமைதி, கற்பொழுக்கம், பிறர் நலம் காத்தல், பரஸ்பர ஒத்துழைப்பு, மன்னிப்பு, சகிப்புத்தன்மை, நடுநிலைமை, அமானிதம்

கலந்தா லோசனை, சமூக எழுச்சி போன்ற ஒழுக்கப் பண்புகள் ஏற்பட வேண்டுமென இசுலாம் எதிர்பார்க்கின்றது.

## தாஹா : பாடல்களில் காணப்படும் சமயக்கருத்துகள்

சமண, பௌத்த சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தனர். சமயக் கருத்துகளை மையப்படுத்தித் தமது நூல்களை அமைப்பது இவர்தம் படைப்பு நெறியாக இருந்தது. அவ்வகையில் தமிழின் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் ஆகியவற்றில் சமண, பௌத்தரது ஆக்கங்கள் மிகுந்திருக்கக் காணலாம். அரசர்கள், செல்வர்களது ஆதரவு சமயஞ்சார்ந்த துறவியருக்கும், வேதியருக்கும் கிடைக்கலாயிற்று. சமய அறிஞர்கள் ஊர் ஊராகச் சென்று சமயங்களைப் பரப்ப இலக்கியத்தைக் கருவியாகக் கொண்டனர். பாடுபொருள், பக்தி உணர்வாக அமைந்தது. காதலாகிக் கசிந்து ஓதும் வழிபாட்டுப் பாடல்கள் உருவாயின. போட்டி போட்டுக் கொண்டு தத்தம் சமயஞ்சார்ந்த இலக்கியங்களைப் படைக்கும் நிலை ஏற்பட்டது. பல்லவர் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. பழந்தமிழர் சமயம் ஏற்றம் பெற்றது. காரைக்காலம்மையாரும், முதலாழ்வார்களும் பாடிய பாடல்களில் முறையே சிவனையும், திருமாலையும் துதிக்கும் நிலையைக் காணலாம். தமிழும் இசையும் இணைந்து பொதுமக்களை ஈர்த்த இயக்கமாகப் பக்தி இயக்கம் தோன்றியது. வானளவும் கோபுரங்களைக் கொண்ட கோயில்கள் எழுந்தன. கலைகள் வளர்ந்தன. உலக வாழ்வில் வெறுப்பும், துறவில் விருப்பும் கொண்ட சமண, பௌத்த சமயங்களது செல்வாக்குக் குறைந்தது. இறைவனைத் துதிக்கும் துதிப்பாடல்களைச் சைவ, வைணவப் பெரியோர் இயற்றினர். அவை தலங்கள் தோறும் மக்களால் பாடப்பட்டன. தமிழ் உணர்ச்சி சமய உணர்ச்சியாகப் பரிணம் பெற்றது எனலாம்.

இதனைத் தொடர்ந்து அதிரைத் தாஹா சிற்றிலக்கியங்களில் இறை உணர்வு, நபிகள் சிறப்பு, மறுமை, மாண்பு, மார்க்கம், இறைநெறி என சமய உணர்வு கருத்து அதிகம் பொதிந்துள்ளது. அவற்றுள் சில சமயக் கருத்துகள் குறித்து காண்போம்.

## ஃகௌது முஹிய்யித்தின் பிள்ளைத்தமிழ்

இசுலாமியத் தமிழ்ப்புலவர்கள் இசுலாமியச் செய்திகளை மரபுத் தமிழ்த் தேனில் குழைத்து மாந்தர்களுக்குக் கொடுத்தவர்கள். தமிழ் மரபு பேணும் தகுதியில் சளைக்காத இசுலாமிய புலவர். வரிசையில் நின்று ஒரு சில ஆண்டுகளுக்கு நான்கு பிள்ளைத் தமிழ் நூல்கள் படைக்கப்பட்டுள்ள செய்தி சிந்தனைக்குரியது. கவிஞர் தாஹா அவர்களின் „கௌது முஹிய்யித்தின் பிள்ளைத்தமிழ்… கடந்த பத்தாண்டுகளுக்குள் இசுலாமிய புலவர்கள் படைக்கப் பெற்ற நான்காவது பிள்ளைத்தமிழ் நூலாகும்.

‘பையப் பைய ஷர்க்’ என்னும்

பாவக் கறையைக் கொன்றவராம்”

“உய்யும் மார்க்கம் தந்தவராம்

ஓதும் வேதம் விரித்தவராம்”

இசுலாமின் படி, ‘மன்னிக்கப்படாத பாவத்தை குற்றத்தை ஷ்ர்க்’ என்பார்கள் (Mohammed Taha, 1994). உதாரணத்திற்கு அல்லாஹ்விற்கு இணை வைப்பது (அல்லாஹ்விற்கு இணையாக இன்னொருவரை கருதுவது) ஹிர்க் ஆகும்” குர்ஆன் 4:48, 137 மற்றும் 47:34ன் படி இணை வைப்பவர்கள் அல்லாஹ்வினால் மன்னிக்கப்படமாட்டார்கள். இயேசுவை இறைவனென்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றபடியால், குர்ஆன் அவர்களை,

‘இசுலாமிய நம்பிக்கையற்றவர்கள் (காஃபிரூன்) என்றும்

இணைவைப்பவர்கள் (முஸ்ரிகூன்) என்றும் குற்றம் சாட்டுகிறது” (குர்ஆன் 9:30-33)

யூதர்கள் (நபி) உஜைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் (ஈஸா) மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று (ஈஸா) மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். இது அவர்கள் வாய்களால் கூறும் கூற்றேயாகும், இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு இவர்கள் ஒத்துப்போகிறார்கள். அல்லாஹ் அவர்களை அழிப்பானாக, எங்கே திருப்பப்படுகிறார்கள்? அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும் தம் சந்நியாசிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக் கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளார்கள். பையப்பைய அதாவது கொஞ்சம் கொஞ்சம் ஹிர்க்… என்கிற அல்லாஹ்விற்கு இணையாகக் கொண்ட பாவக் கறையைக் கொன்றவது என்ற வரிகளில் இறைக் குறித்து பேசப்பட்டுள்ளது.

"மீனின் வயிற்றுள் சென்றவரை

மீட்டி விட்ட பெரியோனே,

வாட்டும் திக்குடல் புகுந்தவரை

வருடும் தென்றல் காற்றிந்தே"

இவற்றில் முதல் பாடல் யூனஸ் எனும் தூதரைப் பற்றியது (Mohammed Taha, 1994).

"இறையின் மறையை ஏழாண்டில்

இனிதாய் மனனம் செய்வதரே"

## மனனம்

'மனனம் என்பதற்குச் சிந்திப்பது, ஆலோசிப்பது என்பது பொருள். ஆனால் இங்கு மனனம் என்னும் சொல்லானது பரிபாயாக (மறைமுகமாக உணர்த்தும் சொல்) பயன்படுத்தப்படுகிறது" என்னும் விளக்கத்தை இணையவழி அறிய முடிகிறது.

'திரும்பத் திரும்ப ஓதி மனனம் செய்வதற்காக நீர் முயற்சிக்காதீர். அதை உமது உள்ளத்திலே ஒன்று சேர்ப்பது நமது பொறுப்பு" (திருகுர்ஆன் 75:16-19)

என்று திருக்குர்ஆன் கூறியது. மேலும் மனனம் செய்ததை மறந்து விடாமல் இருப்பதற்காக இசுலாமில் சிறப்பான ஒரு ஏற்பாட்டையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்தார்கள். 'முஸ்லிம்கள் தினமும் நடத்துகின்ற ஐந்து நேரத் தொழுகின்ற தொழுகைகளிலும் திருகுர்ஆனின் சில பகுதிகளையாவது ஓதியாக வேண்டும்" என்பது தான அந்த ஏற்பாடு. திருகுர்ஆனை ஏழே ஆண்டில் இனிதாய் மனனம் செய்தவரே என அதிரை தாஹா தம் பாடலில் புகழ்ந்து கூறியுள்ளார்.

## மக்கா

மெக்கா, அரபு மக்கா, பண்டைய பக்கா, நகரம் மேற்கு சவுதி அரேபியா, செங்கடல் கடற்கரையிலிருந்து உள்நாட்டில் உள்ள ஷிராத் மலைகளில் அமைந்துள்ளது. இது இசுலாமிய நகரங்களில் மிகவும் புனிதமானது. இசுலாமியத்தின் நிறுவனர் முஹம்மது மக்காவில் பிறந்தார். இந்த மத மையத்தை நோக்கி இசுலாமியர்கள் தினமும் ஐந்து முறை பிராத்தனைச் செய்கிறார்கள்.

அனைத்து பக்தியுள்ள மற்றும் திறமையான இசுலாமியர்கள் முயற்சி தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது (ஹஜ் யாத்திரை) மக்காவிற்கு, இது புனிதமானது என்பதனால் இசுலாமியர்கள் மட்டும் நகருக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

"மக்கா சென்றும் ஹாஜிகளாய்

வந்தும் ஈமான் இழக்கின்றார்" (Mohammed Taha, 1994)

## ஹாஜி

'ஊரை மறந்து, உற்றார் உறவினரை மறந்து, தொழிலை மறந்து, பொருளை மறந்து, இலட்சக்கணக்கானோர் மத்தியில் இருந்தாலும் அனைவரையும் மறந்து ஏக இறைவனின் அன்புக்காக ஏங்க வைக்கும் ஏற்றமிகு நாட்களே ஹஜ் நாட்கள்" ஹாஜி என்ற பெயர்ச்சொல் இசுலாமிய வழக்கு ஆகும். ஹஜ் பயணத்தை நிறைவேற்றியவர் என்பது இதன் பொருள்.

## ஈமான்

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் மக்கள் மத்தியில் இருந்தார்கள். அப்போது ஜிப்ரில் (அலை) அவர்கள் (மனிதரின் தோற்றத்தில் வந்து) நபி (ஸல்) அவர்களிடம் ஈமான் என்றால் என்ன? என்ன? என்று கேட்டார். அதற்கு நபியவர் ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவன் வானவர்களையும் அவனுடைய சந்திப்பையும் அவன் தூதர்களையும் நீர் நம்புவது மேலும், மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவதையும் நீர் நம்புவது எனக் கூறினார்கள்" மக்கா, ஈமான், ஹாஜி போன்ற இறை வார்த்தைகளை அதிரை தாஹா பயன்படுத்தியுள்ளார்.

## மார்க்கம்

மார்க்கம் என்பது இறைவனை அடையக் கூடிய வழிகளாகும். புராணங்கள் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம், தவ மார்க்கம், தான மார்க்கம் என நான்கு மார்க்கங்கள் கூறப்படுகின்றன.

பக்தி மார்க்கம் - பக்தி மார்க்கம் பற்றி நாராத பக்தி சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

"நடுக்கம் கொடுக்கும் நரகநிலை

நட்டோர்க் குரைத்து நன்மார்க்கம்" (Mohammed Taha, 1994)

உண்மையான நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அல்லாஹ்வை (அவர்கள் முன்) நினைவு கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும் அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய நம்பிக்கை மென்மேலும் அதிகரிக்கும் என்று மேற்கூறிய பாடல் வழி அறியலாம்.

"ஓதும் நாவில் பொய்யின்றி

ஒழுக வேண்டும் என்றவரே" (Mohammed Taha, 1994)

ஓதுகின்ற நாவில் பொய் பேசுதல் கூடாது. பொதுவாகவே பொய் பேசுதல் தவறு என்பதைக் கூறுகிறார்.

"பாவ மூட்டை அவிழ்ந்தழியப்

படைத்தோன் பாலே மன்னிப்பு

பாங்காய் கேட்கத் தினந்தூண்டி

பாசம் இறைபால் பாய்ச்சியவர்" (Mohammed Taha, 1994)

பாவங்களை சேர்த்துக் கொண்டு, மூட்டையாக சுமப்பது மிகவும் கடினமான ஒன்று. அச்சுமையை அவிழ்த்து அரிய வைக்க படைத்த இறைவனால் மட்டுமே முடியும்.

'இறைவன் மன்னிப் படைந்திடுவீர்

இயங்கி நரகத் கதவடைப்பீர்

இன்பச் சுவன வாழ்க்கையிலே

என்றும் நிலைத்தே நிறைபெறுவீர்" (Mohammed Taha, 1994)

இறைவனிடம் மன்னிப்பைப் பெற்றால் மட்டுமே நரகத்திற்கானக் கதவை அடைக்க முடியும் இன்பச் சுவனம் அதாவது சொர்க்கத்தில் என்றும் நிலைத்தே நிலைபெறுவீர் என்கிறார் ஆசிரியர்.

'மருண்டு புரண்டு துயின் றிடவோ?

மறதி தன்னில் அயர்ந்திடவோ?

இணங்கி இறையைத் தினம் வணங்கி

இம்மை மறுமைப் பேறோங்கி" (Mohammed Taha, 1994)

இறைவனை தினம் வணங்கி இம்மை, மறுமை பயன் பெறுதல் குறித்துக் கூறுகிறார்.

## வலிமார்கள் வாழ்த்து

வலிமார்கள், 'அல்லாஹ்வின் கட்டளையும் கண்மணி நாயகம் அன்னவர்களின் ஸீன்னத்துகளையும் ஒன்று விடாமல் பின்பற்றி, இசுலாம் என்னும் மார்க்கத்தில் முறையாக நடந்து ~ர்அத், தரீகத், ஹக்கத் என்ற மன்ஸில்களை அதாவது படித்தரங்களைகடந்து இறுதியில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொண்டர்களே அல்லாஹ் அவ்வலியாக்கள் வலிமார்கள் எனப்படுவார்" (Mohammed Taha, 1992) அவ்லியாக்கள் என்றால் அல்லாஹ்வின் நேசர்கள் என்று பொருள் வலி என்ற ஒன்றுக்கு மேற்பட்ட பல இறை நேசர்களை குறிக்கும். நாம் வலிமார்கள் என்று கூறினால் அதில் லெஹாபாக்கள் தாபியீன்கள், தபஅத்தாபியீன்கள், இமாம்கள் ஏனைய அவ்விலயாக்கள் அனைவரும் அடங்குவார்கள் என்றாலும் பொதுவாக மக்கள் பேசும் பொழுது, ஸஹாபாக்களை அவர்களது சிறப்பான அந்தஸ்தை கூறியே அதாவது ஸஹாபாக்கள் என்று கூறியே அழைக்கிறார்கள். ஏனைய தாபியீன்கள், தபஅத்தாபியீன்கள், இமாம்கள், இசுலாமிய பெரியார்கள் இவர்களைத்தான் பொதுவாக அவ்வலியாக்கள் என்று கூறுகிறார்கள். 'வலிமார்கள் - அல்லாஹ்வின் நேசர்கள்என்று பொருள். இறை நேசச்செல்வர்களை எண்ணும் போழ்தில் இன்பம் எழுகின்றது. ஆன்மீகப் பக்குவம் மலர்கின்றது. இறைவனின் அருளைப் பெற உள்ளம் துடிக்கின்றது. அத்தகு மகான்களைப் பற்றி எழுத ஆர்வம் பிறந்து பாடல்களாக உருவானது. வலிமார்கள் வாழ்த்து,

'ஈஸா நபிக்கோ அளித்தனன் இறைவன்

ஈடிலா மருந்தவர் நோயைக்

கூசியே ஓடச் செய்தனர் மாந்தர்

குளிர்ந்தனர் அரும்பணி கண்டே"

'மூஸா நபிக்கோ அளித்தனன் இறைவன்

முழுவாற்றல் உள்ளதோர் தடியை

நீசர்கள் அஞ்சி நில்லாமல் ஓட

நீள்திறம் காட்டினர் வியக்க" (Mohammed Taha, 1992)

## சிராஜீல் மில்லத் பிள்ளைத் தமிழ்

சிராஜீல் மில்லத் அல்ஹாஜ் ஏ.கே.ஏ. அப்துஸ்ஸமத் சாஹிப் அவர்கள் முஸ்லீம் லீக் தலைவராகப் பரிணமித்தவர். சமூக நல்லிணக்க நாயகம்; இசுலாமிய இலக்கியச் செல்வர்; எல்லா மதத்தினரையும் அரவணைத்துச் சென்றவர்; தமிழ் இலக்கியத்தில் தேர்ந்த ஞானி; ஆன்மீகத் துறையில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர்; திருகுர்ஆன் ஆய்வில் திணைத்தவர்; இசுலாமிய மற்றும் உலக வரலாறு பற்றிய துல்லிமான அறிஞரென்றெல்லாம் போற்றப்பட்டவர். இவரைப் ஆர்.எம்.

ஜியாவுத்தின் சிராஜீல் மில்லத் பாமாலை என்னும் நூலைத் தொகுத்தளித்தார். சமய வேறுபாடின்றி கவிஞர்கள், பாக்களில் புகழ்ந்து சிராஜீல் மில்லத்தின் ஆக்கங்களை வெளிப்படுத்தினார்கள். தமிழக இசுலாமிய சமுதாயத்தில் ஒளி விளக்காகத் திகழ்ந்து சரித்திர சாதனைகள் பல புரிந்தவர் சிராஜீல் மில்லத் அல்ஹாஜ் ஏ.கே.ஏ. அப்துஸ்ஸமத் சாஹிப்.

## இறைவனின் புகழ்

'தொழுதுவஞ்சிக் கொஞ்சியுனை அஞ்சிப் பணிந்தேனே
தொல்பூமி படைத்தவனே வானம் படைத்தானே
அழுதுக்கெஞ்சி நின்றாலும் யாருக்குமே தோன்றாய்
ஆனந்தமாய்க் கண் அழுதால் அகத்துள்வருபவனே
முழுது முன்னை நினைந்துருகின் மூச்சிலிருப்போனே
முக்காலம் அறிந்தவன் நீ உணர்த்தியருள்வோனே
பழுதின்றி எம்பிள்ளை அப்துல் சமத்தேனை
பாரறியக் காத்தருள்வர் பார்காக்கும் கோனே, " (Backiamary, 2013)

இறைவனின் சிறப்புகளைக் கூறி புகழ்வதாக மேற்கூறியப் பாடல் இயற்றப்பட்டுள்ளது.

'ஆதமுதல் அருமார்க்கம் ஆக்கிவைத்தாய் தினை
ஆட்சிசெய்ய இலட்சமான நபிமார்கள் தானே,
ஓதி ஓதி உன்றன் நீதி தொண்டர்புகழ் வோனே
ஒப்பில்லாத இறைவா உன்னை ஓதா நாவும் வீணே
காதம் கமழ் வேதம் நபிமுஹம்மதைத் தந்தோனே
காரிருளை அழிக்கும் படை வேதம் தருவோனே
சீதகுணச் சிற்பியான அப்துல் சமத்தானே
சீருலகம் பார்க்கக்காத்து சேர்ந்தருளு கோனே, " (Backiamary, 2013)

இத்தகையச் சிறப்பினை உடைய இறைவனே, ஒப்பில்லாத இறைவனே உன்னை பற்றிய சிறப்பினை ஓதாமல் நாவு இருப்பின் அந்நாவு இருப்பதற்குப் பயனில்லை என்கிறார் ஆசிரியர்.

'தாய்கருவில் இருக்கையிலும் தாங்கிவந்தோம் உன்னை
தாய்ப்பாலை ஊட்டுகையில் தரு உவகைக் கண்டோம்
வாய்பழுத்த கலிமாவை வளர்க்கும் தாயும் சொல்ல
வாய்ப்பிளந்தே குழல்மொழியில் வாஞ்சையோடு சொன்னோம்,
காய்புளிக்கக் கனி இனிக்கக் காரணங்கள் காட்டு
காப்பவனே உன்மகிமை கண்டு சொல்வாரானே
ஆய்ந்துரைக்கின் அர்ப்பணித்தார் அப்துல்சமத்தானே
அன்னவரைக் காத்தருளி அருள்புரிவாய் கோனே" (Mohammed Taha, 2001)

கலிமா 'கலிமா என்பது சாட்சி பகர்தல் என்ற அர்த்தத்தைக் கொண்டதாகும். இது ஐந்து இசுலாமியக் கடமைகளுள் ஒன்று" 54 தாயுடைய கருவல் இருக்கின்ற பொழுதும் தாங்கி வந்தோம்

இறைவா, தாய்ப்பாலை ஊட்டுகையில் ஏற்படும் மகிழ்வைக் கண்டோம். (கலிமா) இசுலாமிய கடமைகளைத் தாய் சொல்ல வாயினை பிளந்த அழகிய இனிமையான மொழியல் விருப்பத்துடன் சொன்னோம். காய் புளிப்பது, பழம் இனிப்பது போன்றவற்றின் காரணம் காட்டுபவனே, எங்களைக் காப்பவனே உனது மகிமைகளை பார்த்து சொல்பவர் யாரே, அருள் புரிபவனே என்று மேற்கூறிய பாடலில் இறைபுகழ் வார்த்தைகள் அமைந்துள்ளன.

## சல்லல்லாஹு_ அலைஹிவசல்லமே (சலவாத்துச் சதகம்)

இலக்கியம் மனிதவாழ்வுக் கு அறிவையும் குறிக்கோளையும் ஊட்ட வேண்டும் என்பது ன்கார்வில்டியின் கருத்து. அருட்கவி நமக்களித்திருக்கும் ஜவவாத்துச் சதகம் அறிவை வளர்க்கின்றது. வாழ்க்கைக்குரிய குறிக்கோளை வகுத்துக் காட்டுகிறது. உயிருள்ள காவியம், அண்ணலாரின் பிறப்பிலிருந்து இறப்பு வரை உள்ள வரலாற்றுச் செய்திகளை சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். பாட்டுக்குப் பொருள்தரும் கவிஞர் உரைநடையில் முழு விளக்கத்தையும் ஈந்துள்ளார். மிக்கபயன் தருகிறது என சலவாத்துச் சதகத்தின் வாழ்த்துரை அமைந்துள்ளது.

## ஸலவாத்

'அல்லாஹ்வும், வானவர்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலவாத் கூறுங்கள்" (திருகுர்ஆன் 33:56)

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள ஸலவாத் என்ற சொல் இரண்டு பொருள் கொண்டதாகும். ஒன்று அருள் புரிதல் மற்றொன்று அருளை வேண்டுதல். இவ்வசனத்தில் அல்லாஹ், வானவர்கள், மனிதர் ஆகிய மூவருடன் இச்சொல் தொடர்புபடுத்தி மூன்றுக்கும் ஒரே விதமான பொருளை வழங்க கூடாது.

அருள் புரிகிறான் என்று பொருள் கொண்டால் அல்லாஹ்வும் அருள் புரிகிறான், வானவர்கள் அருள் புரிகிறார்கள், நீங்களும் முஹம்மதுக்கு அருள் புரியுங்கள் என்ற விபரீதமான கருத்து வந்து விடும். ஏனென்றால் வானவர்களும், மனிதர்களும் அருள் புரிய முடியாது.

அருளை வேண்டுங்கள் என்று பொருள் கொண்டால் மனிதர்களுக்கும், வானவர்களுக்கும் மட்டுமே இப்பொருள் பொருந்தும் அலலாஹ்குப் பொருந்தாது. ஏனென்றால் அல்லாஹ் நபிகள் நாயகத்திற்காக அருளை வேண்டுவதாகப் பொருள் இருந்தால் இன்னொரு அல்லாஹ் இருப்பதாகவும் அவனிடம் அல்லாஹ் வேண்டுவதாகவும் இசுலாமியத்தில் அடிப்படைக்கே எதிரானக் கருத்து வந்துவிடும் எனவே அல்லாஹ் ஸலவாத் சொல்கிறான் என்பது போன்ற சொற்களைப் பயன்படுத்தாமல் இசுலாமியர்கள் தவிர்க்க வேண்டும்.

இவ்வசனத்திற்குச் சரியான பொருள் கொள்ள வேண்டுமென்றால் அல்லாஹ்வுடன் ஸலவாத் என்ற சொல்லை இணைக்கும் போது அருள் வேண்டுகிறார்கள் என்ற பொருளும் கொள்ள வேண்டும். இதனடிப்படையில், 'நபிகளுக்கு அல்லாஹ் அருள்புரிகிறான், வானவர்கள் அருளை வேண்டுகிறார்கள், நீங்கள் அவருக்காக அருளை வேண்டுங்கள் என்பது தான் இவ்வசனத்திற்குரிய சரியான பொருளாகும்" என்று இணையதள பிரதின் வாயிலாக அறிய முடிகிறது.

'ஆழம் இல்லாக் குளத்தில் கலக்கா அருநீர் குடித்திடலாம்

அதனைக் கலக்கின் சேறும்கலந்தே அரும்பயன் நீங்கிவிடும்,

பாழாம் தர்க்கம் செய்தே வாழ்வைப் பதறிக் கலக்காமல்

பண்பாய்ப்படைத்த இறையினருகளைப் பருகச் சொன்னவராம்

விழத்துயரம் கலிமா முதலில் ஏற்றார் கதிஜாவும்

வீரர் அலியும் முதியோர் பக்கர் விரும்பி ஏற்றார்கள்

ஏழ்வான் ஏழ்மண் கண்டநபியே இதயம் குளிர்ந்தீர்கள்

ஏந்தல் நபியே சலலல்லாஹூ_ அலைவஹிவல்லமே"

ஆழமில்லாத குளத்தில் மெதுவாகச் சென்று தண்ணீர் குடிக்கலாம். அதனைக் கலக்கி விட்டால் சேறும் தண்ணீரும் கலந்துவிடும் எந்த பயனும் இல்லாமல் போகும் அதுபோல பதட்டமின்றி பண்பாய் நம்மை படைத்த இறைவனை அணுகி அருளிப்பெற வேண்டும் என மேற்கூறிய பாடலின் கூற்றாகும்.

## பெருமனார் பிள்ளைத்தமிழ்

பெருமனார் (ஸல்) அவர்கள் மனிதர்களுக்குக் குலம், கோத்திரம் முதலிய அடிப்படையில் வேற்றுமை நிலவுவதை விரும்பாதது மட்டுமல்ல வெறுத்தார்கள். மனிதகுலம் ஒன்றே என்ற கொள்கையில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டை இந்த நூலாசிரியர் உயிர்ப்பும் உணர்வும் கலந்த நடையில் எழுதியிருப்பது பலநூறு தடவை படிக்க வேண்டிய பகுதி.

'மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உணர்வு காட்வது அறவே கூடாது. உலகத்து மக்கள் அனைவரும் ஆதாமின் வழி வந்த சகோதரர்களே யாவர். ஒருவரையொருவர் இனம் காணவே குலங்களும் கோத்திரங்களும் உருவாயின. இதையே திருமறை, மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் ஆக்கினோம். ஆதலால் ஒருவர் மற்றவரை விட மேலானவர் என்று பாராட்டிக் கொள்வதற்கில்லை" (திருகுர்ஆன் 49:13)

என்ற இறைவாக்கு வரலாறாக மாறினால் கெட்ட போரிடும் உலகத்தை மாற்றலாம். அமைதியும் சமாதானமும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கலாம் என்கிறது திருகுர்ஆன்.

'மெய்ஞ்ஞானம் பேரொளி அஞ்ஞான வேரழி மேலான நபிகள் நாதர்

மெய்ச்சுடர் கொண்டுள்ளம் மிளிர்ந்திடச் செய்தனன்

மிகுவெழில் கூட்டினானே,

உய்யவழி சொல்லுமொரு மெய்யாற்றல் தந்தனன்

ஓரிறை யான இறைவன்

உயர்ந்தஎம் குலத்தனில் உதித்தெழும் பிள்ளையே

உற்ற நெறி திறமை தந்தான்,

மெய்ஞான குருவாகி அஞ்ஞானம் கருக்குமொன்

மிளிர்தினை வளர்க்க வந்தீர்" (Mohammed Taha, 1994)

மழைபெய்வித்து மண்ணகம் காக்கும் இறையருளால் பிறந்த பிள்ளையே, பேர்பெற்ற பிள்ளையாய் வளர்ந்து ஊர், உலகம் போற்றுமாறு தீன்பணி செய்ய தீன் செழிக்க 'சிராஜின்… நபிகளே செங்கீரை ஆடுவிராக. பொய்யழிய மெய்ஞ்ஞானப் பேரொளியாய் வந்த பிள்ளையே, உய்ய வழி சொல்ல வந்த எங்கள் ஒப்பற்ற இல்லத்தில் பிறந்த குலக் கொழுந்தே, அன்பு வளர, பண்பு மிளிர, தீன் செழிக்க செங்கீரை ஆடுவிராக என மேற்கூறிய பாடல் அமைந்தள்ளது நபியின் பிறப்பு குறித்தும் இறைக்குறித்தும் தாஹா விளக்குகிறார்.

'நித்தமும் இறை எண்ணி நீள்குகை ஹீராவில்

நின்று தவம் புரிந்த பிள்ளை,

நிலத்தனில் மனிதர்கள் நிலைகெட்டு

நிற்பதைக் கடிந்த பிள்ளை” (Mohammed Taha, 1994)

சத்திய முயற்சியை செய்கின்றவர் நம் வழியைசல் சார்ந்தவர் என்ற இறைவாக்கிற் கேற்ப வாழ்ந்த எம் பிள்ளையே, குகை ஹிராவில் தவமிருந்து வஹீ ஏந்தி வந்து புத்தி கெட்டார்க்குப் புத்திப் புகட்டிய செல்வமே சித்தம் மகிழ முனீரூன் நபிகளே செங்கீரை ஆடுவிராக. இறைவனை எண்ணுதல் மற்றும் தவம் புரிதல் குறித்தும் மேற்கூறிய பாடலில் தாஹா குறிப்பிடுகிறார்.

## ஓர் இறைக் கொள்கை

கலப்பில்லாத ஓரிறைக் கொள்கை இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். இன்று உலகத்தில் உள்ள எல்லா மதங்களையும் எடுத்துப் பார்த்தால் ஏதோ ஒரு வகையில் அங்கு பல தெய்வ வணக்கம் குடி கொண்டிருப்பதைப் பார்க்கலாம். உயிரோடு உள்ள மனிதர்களை வணங்குகிறார்கள், இறந்தவர்களை வணங்குகிறார்கள், பொருட்களை வணங்குகிறார்கள். இப்படியெல்லாம் நடப்பதை இன்றைய உலகில் பார்க்கலாம்.

கடவுள் கொள்கை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதை திருக்குர்ஆன் தௌளத் தெளிவாகச் சொல்கிறது. இன்னும் பல கோணங்களிலும் கடவுள் கொள்கையை வர்ணிக்கிறது இவைகளின் அடிப்படையில் அந்த ஒரு இறைவனுக்கு யாரையும் இணையாகாதச் சமூகமாகப் பரிணமிப்போம்.

“தந்தைக்கும் தாயுக்கும் பணிந்திட இறைவன்

தக்க முறையிலே போதித்தான்

தந்தையும் தாயுமே இணையாக்கி - ஷிர்க்கின்

தயவினை நாடுக - என்றாலும்

சிந்தையில் கொள்ளாதே தள்ளுகா, - என்றே

சீர்நெறி பேசிடும் தேன் நபி,

சீர்மணில் பேர் விணில் இறையன்றிவே

தெய்வமும் இல்லையே இல்லையே, ” (Mohammed Taha, 1994)

மேற்கூறிய தாஹாவின் பாடல் ஓர் இறைக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

## நாகூர் செய்யது சுல்தான் பீபி அம்மாள் பிள்ளைத்தமிழ்

செய்யிது குலத்தில் பிறந்த ஆன்மீகப் புதல்வர், மெய்ஞ்ஞான சொரூபி, ஆர்புபில்லா யூசுபு நாயகம் (ரஹ்) அவர்கள். அதே வம்ச பரம்பரையில் முளைத்து, வளந்து வான்புகழ் கொண்டவர்கள் செய்யது சுல்தான் பீபி அம்மாள் அவர்கள். இவர்கள் யூசுபுதாதா ஓலியுல்லாஹ் அவர்களின் துணைவியார். கௌது முஹ்யித்தீன் பிள்ளைத்தமிழ் (1983), அபூபக்கர் சித்திக் பிள்ளைத்தமிழ் (1992) ஆகிய பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியங்களைப் படைத்து, இசுலாமியத் தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்புகள் சேர்த்த அதிரை அருட்கவி, அல்ஹாஜ் அடுத்து அகில உலக அருட்கொடைக்கு ஒரு பிள்ளைத்தமிழைப் பாடியதுடன் நான்காம் பிள்ளைத்தமிழாக ஒரு பெண்பாற் பெயர்த்தியையே (பேத்தி) தேர்ந்தெடுத்துள்ளார். நம் எல்லோருக்கும் தாயாய்த் திகழும் செய்யது சுல்தான் பீபியை கண்ணியமிக்கப் பிள்ளையாகப் பாவித்துப் பாடுகிறார். பாவலர்,

‘வலபுறத்தில் நின்று பெரும் வெற்றி பெற பீபி

வணக்கத்திலே என்றும் பயன் பெற்றமணி பீபி

நலமிழந்தே இடப்புறத்தில் நம் பெண்டீர் உள்ளார்
நலம் பெறவே நல்லுரைகள் நவிலவாரும் கிள்ளாய்
கலிமாவாம் மாணிக்கப் பதக்கமணி யாமல் உலகில்
கண்டபடி வாழும் பெணோ தினில் பெரும் பணியாம்
பலம்பெறவே சப்பாணிக் கொட்டுக சுல்தான்
நலம் பெறவே சப்பாணிக் கொட்டுக சுல்தான்," (Backiamary, 2013)

தீயவழியில் செல்லும் போது ஏற்படும் விளைவு குறித்தும் அவ்விளைவில் இருந்து மீட்குமாறு இறைவனை வேண்டுவதாக மேற்கூறிய பாடல் அமைந்தள்ளது.

## முடிவுரை

இலக்கணம், இலக்கியம் தோன்றி பல்வேறு பரிணாம வளர்ச்சியடைந்து, பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் என அடுத்த நிலை நோக்கி நகரும் போது அதன் பொருண்மைகளும் மாற்றம் அடைகின்றன. தங்களுக்கெனக் கொள்கை கோட்பாடுகளை அனைத்து மதங்களும் கொண்டிருக்கின்றன. நாகரீகம் மற்றும் அறிவியல் வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். சூரிய, சந்திர கிரகணங்கள், வானிலை என அனைத்தும் அறிந்து தொழில்நுட்ப ரீதியிலும் முன்னேறிக்கொண்டு இருக்கிறோம். இருப்பினும் மக்கள் மனதில் இறை நம்பிக்கை நிலைத்து நிற்கிறது. அதனடிப்படையில் இசுலாமியக் கொள்கைகளும் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மேலும் இசுலாம் சமயம் ஒழுக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கை, அன்பு, அடிபணிதல், வழிபடல், அஞ்சுதல், உரிமைகளை மதித்தல், உதவிச்செய்தல் போன்றவற்றின் மூலம் மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே இணக்கம் உண்டாகும் என்ற எண்ணங்களை மனதில் விதைத்து இசுலாமியர்கள் வழிபட்டுவருகின்றனர். அதன் வழியில் தோன்றிய அதிரை முஹம்மது தாஹாவின் படைப்புகளாகிய சிற்றிலக்கியங்களும் இசுலாமியக் கருத்துக்களை உலகிற்குக் கூறுவனவாக அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொண்டோம்.

## References


Backiamary, F. (2013) Vagaimai Nokkil Thamizh Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India

Kamal Batcha, L. (2006) Islamiya Ilakiyamum Panpadum, Pirai Nila Pathipagam, Thanjavur, India

Mohammed Taha (1992) Valimarkal Valthu Muthal Bagam, Kairiyat Patippakam, Adirampattinam, India

Mohammed Taha (1994) Perumanar Pillai Tamil, Kairiyath Pathippagam, Adirampattinam, India

Mohammed Taha (2001) Islamiya Ilakiya Aivu Thirattu, Mahin Printers, Chennai, India

Ramaiya, N. (2006) Sanga Ilakiyangal Molamum Uraiyum, Varthaman Pathipagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License